பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் திரு.ந.குமரன், B.Sc.,

ந.க.எண்..712/2023/எப்1

நாள்..09.01.2024

| | |
|---|---|
| பொருள் | மனைப்பிரிவு – பட்டுக்கோட்டை நகராட்சி – மகாராஜசமுத்திரம் கிராமம் வார்டு–A பிளாக்–44, நகரளவு எண்..66/3, புல எண்கள்..167/1பா–ல் 4759.39 ச.மீ அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அனுமதி வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக. |
| பார்வை | 1. திருமதி.எஸ்.ஹேமலதா, க/பெ.லேட்.சாமிநாதன் மற்றும் பிரியதர்ஷினி த/பெ.சாமிநாதன் (முதல்வர்) திரு.N.காமராஜ் (பவர் ஏஜெண்ட்) பட்டுக்கோட்டை அவர்களின் விண்ணப்பம், நாள்..26.06.2023 |
| | 2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்..98GG34L (15755)2023 /TD2 /2023 /TCP, நாள்..27.11.2023 |
| | 3. பட்டுக்கோட்டை நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பு, நாள்:20.12.2023 |
| | 4. பட்டுக்கோட்டை நகர்மன்ற தீர்மான எண்:725, நாள்:08.01.2024 |

**உத்தரவு:**

பார்வை 1ல் கண்டுள்ள திருமதி.எஸ்.ஹேமலதா, க/பெ.லேட்.சாமிநாதன் மற்றும் பிரியதர்ஷினி த/பெ.சாமிநாதன் (முதல்வர்) திரு.N.காமராஜ் (பவர் ஏஜெண்ட்) பட்டுக்கோட்டை அவர்களின் விண்ணப்பத்தின் பேரில், பார்வை 2ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் எண். 98GG34L (15755) 2023 /TD2 /2023 /TCP, நாள்..27.11.2023 –ல், பட்டுக்கோட்டை நகரம், மகாராஜசமுத்திரம் கிராமம் வார்டு–A, பிளாக்–44, நகரளவு எண்..66/3, புல எண்கள்..167/1பா–ல் 4759.39 ச.மீ அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 4ல் கண்டுள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.. 725, நாள்..08.01.2024–ல் நகர் ஊரமைப்பு துறையின் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தின்படி, சாலைகள், மூலை முடக்குகள் மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய இடம் ஆகிய பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு மேற்படி இனாம் சாசனம் ஆவணம் மன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் வழங்கப்பட்ட மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது. எனவே, மேற்கண்ட தீர்மானத்தின் பேரில் மனுதாரர் திருமதி.எஸ்.ஹேமலதா, க/பெ.லேட்.சாமிநாதன் மற்றும் பிரியதர்ஷினி த/பெ.சாமிநாதன் (முதல்வர்) திரு.N.காமராஜ் (பவர் ஏஜெண்ட்) அவர்களுக்கு மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி

இணைப்பு...

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

பெறுநர்..

திரு.N.காமராஜ்,
பவர் ஏஜெண்ட். திருமதி.எஸ்.ஹேமலதா, க/பெ.லேட்.சாமிநாதன் மற்றும்
பிரியதர்ஷினி த/பெ.சாமிநாதன்,
செட்டித்தெரு, பட்டுக்கோட்டை.

நகல்.. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் அவர்களின் தகவலுக்கு

நகல்.. நகர சார் ஆய்வாளர் நில அளவை பதிவேட்டில் பட்டுக்கோட்டை நகராட்சி பெயரில் தானமாக வழங்கப்பட்ட பூங்கா இடம், மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மனைகளை உட்பிரிவு செய்ய தக்க நடவடிக்கைக்காக மனைப்பிரிவு வரைபடம் அனுப்பி வைக்கப்படுகிறது.

நகல்..நகராட்சி பொறியாளர், பட்டுக்கோட்டை அவர்களின் மேல் நடவடிக்கைக்கு.

நகல்..நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வாளர், இளநிலை பொறியாளர், வருவாய் ஆய்வாளர், பட்டுக்கோட்டை ஆகியோர்களின் தகவலுக்கு.